ADVT
இங்கே விளம்பரம்
98700 06472 · need24.digital

NEED24 NEWS
हर खबर, हर शहर

நீட் 24 நியூஸ்

ஒவ்வொரு செய்தி, ஒவ்வொரு நகரம்

ADVT
இங்கே விளம்பரம்
98700 06472 · need24.digital

DIGITAL E-PAPER

PRGI APPLICATION UNDER PROCESS
Application No. T/GJ/2026/0619/2304/1577

GST
GSTIN 24CINPG0564Q1ZT

UDYAM REGISTERED
UDYAM-GJ-14-0003714

DIGITAL NEWS NETWORK
இந்தியாவின் நம்பகமான பன்மொழி டிஜிட்டல் செய்தி வலையமைப்பு
11+ Languages | 24×7 Live | e-Paper Daily

எங்கள் App பதிவிறக்கவும்
Download on the App Store
GET IT ON Google Play

www.need24.digital
info@need24.in
+91 98700 06472
FOLLOW US:

தேஜ் | सटीक | निष्पक्ष | जनहित में | सच की आवाज़ | जन-जन की आवाज़ | निडर पत्रकारिता

TAMIL NADU · நீட் 24 நியூஸ் · ஒவ்வொரு செய்தி, ஒவ்வொரு நகரம் · 24 November 2026

திருப்பரங்குன்றம் விவகாரம் – மதுரை முழுவதும் 144 தடை! மதுரை திருப்பரங்குன்றம் மலை விவகாரத்தில் பரபரப்பான சூழல் நிலவி வருகிறது!



மதுரை திருப்பரங்குன்றம் மலை விவகாரத்தில் பரபரப்பான சூழல் நிலவி வருகிறது!

மலை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்றுவது தொடர்பாக ஆதரவு மற்றும் எதிர்ப்பு கருத்துகள் எழுந்துள்ள நிலையில், மதுரை மாவட்டம் முழுவதும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நவம்பர் 23-ஆம் தேதி இரவு 9 மணி முதல் நவம்பர் 25-ஆம் தேதி காலை 10 மணி வரை இந்தத் தடை அமலில் இருக்கும்.

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், திருப்பரங்குன்றம் மலைக்கு பொதுமக்கள் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 24-ஆம் தேதி கார்த்திகை தீபத் திருநாளை முன்னிட்டு காவல்துறையினர் பாதுகாப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

மதுரையில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க மாவட்ட நிர்வாகம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

— Musthafa Hussain, Coimbatore

முத்துப்பேட்டை அருகே தன்னார்வலர்களுக்கு ரெட்கிராஸ் சார்பில் பேரிடர் மேலாண்மை பயிற்சி

முத்துப்பேட்டை அருகே தன்னார்வலர்களுக்கு ரெட்கிராஸ் சார்பில் பேரிடர் மேலாண்மை பயிற்சி திருவாரூர் மாவட்டத்தில் பேரிடர் பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில், திருவாரூர் மாவட்ட இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி மற்றும் முத்துப்பேட்டை வட்டாரக் கிளை சார்பில் தன்னார்வலர்களுக்கான பேரிடர் மேலாண்மை பயிற்சி முத்து

— MAHENDRAN M

விருதுநகர் மாவட்ட ஆட்சியரிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் இலவச வீடு, பாதை சீரமைப்பு, குடிநீர் வசதி கோரிக்கை மனு

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியம் இந்திரா நகர் பகுதி பொதுமக்கள் 2023 நவம்பர் 23 அன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் சார்பில் இலவச வீட்டுமனை பட்டா, இலவச வீடு வழங்குதல், மயானப் பாதை மற்றும் குடிநீர் வசதிகளைச் சீரமைக்க வேண்டுமென கோரிக்கை மனு அளித்தனர். மனுவில், மயானத்திற்குச் செல்லும் பாதையில் உ

— Siva

RELIGION

திருச்சுழி ஸ்ரீ திருமேனிநாதர் கோவிலில் கார்த்திகை மாதம் 10வது திருத்தலமாகிய மகா சங்காபிஷேக விழா வெற்றிகரமாக நடைபெற்றது



திருச்சுழி, விருதுநகர் மாவட்டம் உள்ள அருள்மிகு ஸ்ரீ திருமேனிநாதர் துணைமாலை அம்மன் கோவிலில் கார்த்திகை மாதம் சோமவாரத்தை முன்னிட்டு 14 சிவ திருத்தலங்களில் 10வது திருத்தலமாகிய மகா சங்காபிஷேக உற்சவ விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

விழாவில் 108 சங்குகளில் புனித நீர் நிரப்பப்பட்டு யாகசாலை பூஜைகள் நடத்தப்பட்டு, பின்னர் சுவாமி மற்றும் அம்மனுக்கு அந்த புனித நீர் கொண்டு சிறப்பு அபிஷேகம் வழங்கப்பட்டது. அபிஷேகத்திற்கு பின் கோவிலுக்கு சிறப்பு அலங்காரங்கள் செய்து, தீபாராதனை நடத்தப்பட்டது.

பக்தர்கள் கார்த்திகை மாதம் நடைபெறும் சங்காபிஷேக விழாவில் சுவாமி தரிசனம் செய்தால் நோயற்ற வாழ்வு, திருமணத் தடைகள் நீக்கம், குழந்தை வரம் இல்லாதவர்களுக்கு குழந்தை பெறுதல், உலக நன்மை போன்ற பல நன்மைகள் கிடைக்கும் என்று நம்புகின்றனர்.

இந்த விழாவில் திருச்சுழி, அருப்புக்கோட்டை, காரியாபட்டி உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளிலிருந்து பல பக்தர்கள் கலந்து, சுவாமி மற்றும் அம்மனைத் தரிசனம் செய்து, புனித நீர் பானம் மற்றும் தீபாராதனை அனுபவித்தனர்.

— Siva

நாகை ஆட்சியரகத்தில் நடைப்பெற்ற மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம்



நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் கே.ஜே.பிரவீன் குமார் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க தொடர்புடைய அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் வ.பவணந்தி , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கோ.அரங்கநாதன் , தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ர.ராமலிங்கம் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

— MAHENDRAN M

திருக்குவளையில் மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலிமாறன் 23ஆம் ஆண்டு நினைவு தினம் அனுசரிப்பு



நாகப்பட்டினம் மாவட்டம் கீழையூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த இல்லத்தில் முரசொலி மாறனின் 23 ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு திமுகவினர் மாலை அணிவித்தும் மலர் தூவியும் மரியாதை செலுத்தினர்.நாகை மாவட்ட திமுக செயலாளர் கௌதமன் தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வடவூர் ராஜேந்திரன்,கோவிந்தராஜன், ஒன்றிய திமுக செயலாளர்கள் தாமஸ் ஆல்வா எடிசன்,மலர்வண்ணன்,மகா.குமார் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மரியாதை செலுத்தினர்

— MAHENDRAN M

LOCAL

வேலூர் புதிய பேருந்து நிலையத்தில் போக்குவரத்து சீரமைப்பு: ஆட்டோ ஓட்டுநர்களின் கோரிக்கைக்கு உடனடி நடவடிக்கை



வேலூர் புதிய பேருந்து நிலையத்தின் பார்க்கிங் பகுதியை நேரில் ஆய்வு செய்து, ஆட்டோ ஓட்டுநர்களின் கோரிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

ஆட்டோ ஓட்டுநர்கள் முன்வைத்த முக்கியக் கோரிக்கையாக, காட்பாடியில் இருந்து வேலூர் செல்லும் பேருந்துகள் பழைய பேருந்து நிறுத்தத்தில் பயணிகளை இறக்கிவிட்ட பின்னர், புதிய பேருந்து நிலையத்திற்குள் சென்று பயணிகளை இறக்கிவிட்டு, மீண்டும் பிரதான சாலையில் இடதுபுறமாக நின்று தொடர்ந்து செல்லும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் உடனடியாக ஆலோசனை மேற்கொண்டு, அதனை நடைமுறைப்படுத்த உரிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும், வேலூர் புதிய பேருந்து நிலையத்தின் உள்ளே இருசக்கர வாகனங்கள், ஆட்டோக்கள் மற்றும் கார்கள் அனுமதிக்கப்படுவதைத் தவிர்த்து, பேருந்து போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளவும், இதுதொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் மாநகராட்சி ஆணையர் ஆகியோருக்கு போக்குவரத்துக் கழகம் சார்பில் கடிதம் அனுப்ப அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஆய்வின்போது காட்பாடி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் ம. சுதாகர் அவர்கள், போக்குவரத்துக் கழக துணை மேலாளர் (வணிகம்) மற்றும் பேருந்து நிலையப் பொறுப்பாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

— s.dinesh

HEALTH

மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மரு. கோ.க.அருண்ராஜ் தலைமையில் வேலூர் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் முக்கிய கூட்டம்



மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மரு. கோ.க.அருண்ராஜ், பென்ட்லேண்ட் அரசு வேலூர் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் மருத்துவப் பிரிவுகளின் துறை தலைவர்களுடன் கூட்டம் நடத்தினார்.

கூட்டத்தின் முக்கிய நோக்கம் மருத்துவமனையின் சேவை தரம், மருத்துவக் கல்வி மற்றும் பொதுமக்களின் நலன் ஆகியவற்றை மேம்படுத்தும் நடவடிக்கைகளை பரிசீலிப்பதாகும். அமைச்சர், மருத்துவமனையின் தற்போதைய செயல்பாடுகள் மற்றும் எதிர்கால திட்டங்களைப் பற்றி விவரமாக கேட்டார்.

துறை தலைவர்கள், தங்கள் துறைகளில் எதிர்கொள்ளும் சவால்கள், வசதிகள், பணியாளர் தேவைகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் பற்றிய தகவல்களை வழங்கினர். அமைச்சர், இந்த பிரச்சினைகளைத் தீர்க்க மாநிலம் மற்றும் மத்திய அரசு ஆதரவை வழங்கும் உறுதியை தெரிவித்தார்.

கூட்டம் முடிவில், மருத்துவமனையின் பல்நோக்கு சேவைகளை விரிவுபடுத்தும், மருத்துவக் கல்வி பயிற்சிகளை மேம்படுத்தும் மற்றும் நோயாளி திருப்தியை உயர்த்தும் திட்டங்கள் அடுத்த மாதங்களில் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

— s.dinesh

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குவிந்த ஆயிரக்கணக்கான பெண்கள் – தமிழக அரசின் ஆடு, மாடு வழங்கும் திட்டத்தில் விண்ணப்பிக்க ஆர்வம்!



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குவிந்த ஆயிரக்கணக்கான பெண்கள் – தமிழக அரசின் ஆடு, மாடு வழங்கும் திட்டத்தில் விண்ணப்பிக்க ஆர்வம்!

தமிழக அரசு சார்பில் ஆடு, மாடுகள் வழங்கும் திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம் என்ற தகவல் பரவியதைத் தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று காலை முதலே ஆயிரக்கணக்கான பெண்கள் குவிந்தனர்.

கிருஷ்ணகிரி, ஓசூர், அஞ்செட்டி, கெலமங்கலம், வேப்பனப்பள்ளி, தளி உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கிராமப்புற பெண்கள் அதிக அளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்தனர்.

அரசின் ஆடு, மாடு வழங்கும் திட்டத்தின் மூலம் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில், பெண்கள் விண்ணப்ப மனுக்களை அளிப்பதற்காக நீண்ட நேரம் காத்திருந்தனர்.

இதனால் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பெண்களின் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. காலை முதலே கிராமப்புறங்களில் இருந்து பெண்கள் குழு குழுவாக வந்து மனு அளிக்க குவிந்ததால் அப்பகுதியில் பரபரப்பான சூழல் நிலவியது.

அரசின் நலத்திட்டங்களைப் பெறுவதில் கிராமப்புற பெண்கள் காட்டும் ஆர்வத்தை இந்தக் கூட்டம் வெளிப்படுத்தியது.

— MANIKANDAN

HEALTH

பிஸ்லெரி குடிநீர் மாதிரியில் அதிக புரோமேட் கண்டறியப்பட்டதால் உணவுப் பாதுகாப்பு ஆணையம் சட்ட நடவடிக்கை ஒப்புதல்



இந்திய உணவுப் பாதுகாப்பு ஆணையம் பிரபல குடிநீர் பிராண்டான பிஸ்லெரி மீது சட்ட நடவடிக்கை எடுக்க ஒப்புதல் அளித்துள்ளது. பிஸ்லெரி குடிநீர் மாதிரியை ஆய்வு செய்ததில், புற்றுநோய் அபாயத்துடன் தொடர்புடைய புரோமேட் (Bromate) என்ற வேதிப்பொருள் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக இருப்பது முதற்கட்டப் பரிசோதனையில் கண்டறியப்பட்டது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் தரச் சட்டம் 2006-ன் கீழ், இந்தக் கண்டறிதல் அந்தக் குடிநீர் மாதிரியை பாதுகாப்பற்றதாக வகைப்படுத்தியுள்ளது. இதனால் பிஸ்லெரி நிறுவனம் சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆணையம் இந்த முடிவைத் தொடர்ந்து, பிஸ்லெரி நிறுவனத்திற்கு தேவையான திருத்த நடவடிக்கைகள் மற்றும் அபராதம் விதிக்கப்படலாம் என்று தெரிவித்துள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், எதிர்காலத்தில் இதுபோன்ற மீறல்கள் தவிர்க்கப்படுவதாகவும் ஆணையம் உறுதிபடுத்தியுள்ளது.

— Sudhakaran

காரைக்குடி, செட்டிநாடு வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் முகாம்.



காரைக்குடி அருகே உள்ள செட்டிநாடு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய இறுதி ஆண்டு மாணவிகள் வெற்றியூரில் உள்ள இயற்கை வேளாண்மை அகணி

பண்ணையைப் பார்வையிட்டு இயற்கை விவசாயச் செயல்பாடுகள் குறித்தும், மதிப்புக்கூட்டுப் பொருள்களில் எவ்வாறு sustainable practices கடைப்பிடிக்கப்படுகிறது என்பது குறித்தும் பண்ணையின் சார்பாக விரிவான விளக்கங்களை பெற்றுக் கொண்டனர்..

— M. Arumugam

காரைக்குடி வட்டாட்சியர் அலுவலகம் முன் சுத்தம் செய்யும் நிகழ்ச்சி.



காரைக்குடி வட்டாட்சியர் அலுவலகம்

முன் நேற்றுசிட்டி லயன் சங்கம்,

லியோ சங்கம், காரைக்குடி ஸ்டார்ஸ்

லயன் சங்கம், ஸ்ரீ தாயுமானவர் லியோ சங்கம், அரிய ஆகிய சங்கங்கள் இணைந்து நடத்திய சுத்தம் செய்யும்

நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஏராளமான சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

— M. Arumugam

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் சாதனை.



காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழகம் லண்டனில் உள்ள க்யூ. எஸ். நிறுவனம் கடந்த நவ. 4-ஆம் தேதி வெளியிட்ட 2027-ஆம் ஆண்டுக்கான ஆசியா பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் ஆசியா அளவில் 440-ஆவது இடத்தையும், தெற்கு ஆசிய அளவில் 110-ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.

— M. Arumugam

காரைக்குடியில் நிழற்குடை இல்லாததால் பயணிகள் அவதி.



காரைக்குடி வாட்டர்டேங்க் பஸ் ஸ்டாப் பகுதியில் ரோடு பணிக்காக 2 ஆண்டுகளுக்கு முன் இங்கிருந்த பயணிகள் நிழற்குடையை அகற்றினர். பணிகள் முடிந்து பல ஆண்டுகளாகியும் புதிதாக நிழற்குடை அமைக்காததால், பயணிகள் கடும் மழை, வெயில் காலங்களில் நிற்க முடியாமல் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இங்கு நிழற்குடை கட்டித்தர மாநகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை வைக்கின்றனர்.

— M. Arumugam

CRIME

வேலூர் குடியாத்தத்தில் சட்டவிரோத நாட்டு துப்பாக்கி தயாரிப்பாளரை போலீஸ் கைது



வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில், சட்டவிரோதமாக நாட்டு துப்பாக்கிகளை வீட்டில் தயாரித்து விற்பனை செய்த ஒருவரை போலீஸ் கைது செய்துள்ளது. போலீஸ் நடத்திய சோதனையில், உரிமம் இல்லாத பத்து (10) நாட்டு துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

குடியாத்தம் பகுதியில் உள்ள இந்த வீட்டில், துப்பாக்கி தயாரிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தேவையான அனுமதி எதுவும் இல்லாதது கண்டறியப்பட்டது. போலீஸ் அதிகாரிகள், சட்டவிரோத ஆயுதங்களின் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விரிவான விசாரணை நடத்தியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர், தொடர்புடைய சட்டங்களின் கீழ் கடுமையான தண்டனை எதிர்கொள்வார். இந்த நடவடிக்கை, மாவட்டம் முழுவதும் சட்டமின்மை ஆயுத உற்பத்தியைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

— s.dinesh

வேலூர் குடியாத்தத்தில் சட்டவிரோத நாட்டு துப்பாக்கி தயாரிப்பாளரை போலீஸ் கைது



வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில், சட்டவிரோதமாக நாட்டு துப்பாக்கிகளை வீட்டில் தயாரித்து விற்பனை செய்த ஒருவரை போலீஸ் கைது செய்துள்ளது. போலீஸ் நடத்திய சோதனையில், உரிமம் இல்லாத பத்து (10) நாட்டு துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

குடியாத்தம் பகுதியில் உள்ள இந்த வீட்டில், துப்பாக்கி தயாரிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தேவையான அனுமதி எதுவும் இல்லாதது கண்டறியப்பட்டது. போலீஸ் அதிகாரிகள், சட்டவிரோத ஆயுதங்களின் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விரிவான விசாரணை நடத்தியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர், தொடர்புடைய சட்டங்களின் கீழ் கடுமையான தண்டனை எதிர்கொள்வார். இந்த நடவடிக்கை, மாவட்டம் முழுவதும் சட்டமின்மை ஆயுத உற்பத்தியைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

— s.dinesh

LOCAL

திருச்சுழி அருகே 17-ஆம் நூற்றாண்டு வீரர் நடுகல் கண்டுபிடிப்பு



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே கீழ்குடி கிராமத்தில் 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு நடுகல் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நடுகல் மண்ணில் பாதி அளவிற்கு புதைந்து காணப்படுவதால், ஆராய்ச்சியாளர்கள் கவனமாக அகழ்வாராய்ச்சி செய்து அதன் முழு அமைப்பை வெளிப்படுத்தினர்.

நடுக்கல்லின் மேல் செதுக்கப்பட்ட சிற்பம் சிலை புடைப்புசிற்பமாக உருவாக்கப்பட்டுள்ளது. சிற்பத்தின் மேல் கூரை போன்ற அமைப்பில் வடிவமைக்கப்பட்டு, தலையின் இடது பக்கத்தில் அலங்கரிக்கப்பட்ட கொண்டையுடன் வீரர் காட்சி அளிக்கிறார். வலது கையில் குறுவாளுடன் (சுரிகை) கம்பீரமாக காட்சியளிக்கிறார், குறுவாளின் மேல் எலும்பிச்சை பழம் குத்தப்பட்டுள்ளது. காதுகளில் குண்டலமும் கழுத்தில் கண்டிகை சரப்பள்ளியும், தோள்களில் தோள்வளை, கைகளில் கைவளையலுடனும் இடையில் இடை மணியுடனும் சிற்பம் அழகுற செதுக்கப்பட்டுள்ளது.

இந்த நடுகல் போரின் காரணமாகவோ அல்லது உள்ளூர் பூசல்களில் இறந்த ஒரு வீரருக்காக எடுக்கப்பட்ட நடுகல் என்று கூறப்படுகிறது. 17-ஆம் நூற்றாண்டின் கலை மற்றும் சமூக வரலாற்றை பிரதிபலிக்கும் இந்த கண்டுபிடிப்பு, அந்த காலத்தின் போராளிகளின் வாழ்க்கை மற்றும் மதிப்புகளை வெளிப்படுத்துகிறது.

சுரேஷ் குருசாமி கூறுகிறார், "இந்த நடுகல் அந்த காலத்தின் கலைஞர்களின் திறமையை வெளிப்படுத்துகிறது மற்றும் உள்ளூர் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது."

— Siva

LOCAL

திருச்சுழி சாலை சேதம்: தூசி சுகாதார அபாயம், பொதுமக்கள் கோரிக்கை



திருச்சுழி நகர்ப் பகுதியில் குண்டும் குழியுமாக உள்ள சாலை, கனரக வாகனங்களின் தொடர்ச்சியான பயணத்தால் தீவிரமாக சேதமடைந்துள்ளது, இதனால் வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் பெரும் அவதியை அனுபவிக்கின்றனர்.

சேதமடைந்த சாலையில் ஏற்படும் தூசி, மூச்சுத்திணறல், ஆஸ்துமா போன்ற சுகாதார பிரச்சினைகளை அதிகரிக்கிறது. திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளில் ஆஸ்துமா வருகை அதிகரித்துள்ளது, இது கவலையளிக்கிறது.

இங்கு உள்ள இரண்டு மேல்நிலைப்பள்ளிகள், மூன்று தொடக்கப்பள்ளிகள் மாணவர்கள் தினமும் இந்த சாலையை கடந்து செல்கின்றனர். தூசியால் குழந்தைகளின் சுகாதாரம் பாதிக்கப்படுவதால், பள்ளி மாணவர்கள் பலவித நோய்களுக்கு ஆளாகின்றனர்.

திருச்சுழி சட்டமன்ற தொகுதி பெயரளவில் மட்டுமே உள்ளது, ஆனால் அடிப்படை வசதிகள் இல்லாமல் பொதுமக்கள் சிரமம் அனுபவிக்கின்றனர். மேலும், பிரசித்தமான ஸ்ரீ திருமேனிநாதர் கோவிலுக்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர், இதனால் சாலையில் வாகனப் போக்கு அதிகரிக்கிறது.

இந்த காரணங்களால், திருச்சுழி நகர்ப் பகுதியில் சேதமடைந்த சாலை சரிசெய்ய மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழக அரசுக்கு பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

— Siva

காரைக்குடியில் வாக்காளர் திருத்தப் பட்டியல் முகாம்.



காரைக்குடியில் இன்று நடைபெற்ற வாக்காளர் திருத்த பட்டியல் முகாமில் புதிதாகப் பெயர் சேர்க்க

அதிகாரிகளிடம்

தெரிவித்து பணிகளைச் சிறப்பாக செய்து முடித்தனர்.

— M. Arumugam

காரைக்குடியில் போலியோ சொட்டு மருந்து முகாம்.



காரைக்குடி பகுதியில் இன்று அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும்

மற்றும் அங்கன்வாடி மையங்களில்

5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் நடைபெற்றது. இதில் பெற்றோர்கள் தங்கள் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை கொண்டு வந்து சொட்டு மருந்து கொடுத்து பயனடைந்தனர்.

— M. Arumugam

காரைக்குடி ஸ்ரீ ராஜராஜன் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு பணி நியமன ஆணை.



காரைக்குடி ஸ்ரீ ராஜராஜன் பொறியியல் மற்றும், தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று அமெரிக்க ஐ. டி. நிறுவனமான ஆர். சி. கே. டெக்ஸ் நிறுவனத்தின் நேர்முகத் தேர்வு நடைபெற்றது. இதில் கம்ப்யூட்டர் சயின்ஸ் துறையில் படித்து தேர்ச்சி பெற்ற ஏழு பேருக்கு ஆர்.சி. கே.டெக்ஸ் சி.இ.ஓ ராஜ்குமார் பணி நியமன ஆணையை வழங்கினார்.

— M. Arumugam

புதிய யூனியன் அலுவலக கட்டடத்தை விரைந்து திறக்க கோரிக்கை.



காரைக்குடி சரகத்திற்குட்பட்ட சாக்கோட்டையில் மூன்றரை ஏக்கரில்

புதிய யூனியன் அலுவலக கட்டடம்

இரண்டு தளங்களுடன், கட்டப்பட்டுள்ளது. ஆனால் 2 ஆண்டு நெருங்கியுள்ள நிலையில் இன்னும் பயன்பாட்டிற்கு வரவில்லை. எனவே பணியை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

— M. Arumugam

வேளாங்கண்ணி அதிபர் இருதயராஜ் வருகை



வேளாங்கண்ணி திருத்தல பேராலயம் அதிபர் தந்தை நாகூர் தர்கா வருகை.

உலகப்பிரசித்தி பெற்ற நாகூர் ஆண்டவர் தர்கா 470 ஆம் ஆண்டிற்க்கான கந்தூரிவிழா தொடர்ந்து நடைப்பெற்று வருகிறது.அதனை தொடர்ந்து அழைப்பை ஏற்று வருகை புரிந்த, வேளாங்கண்ணி திருத்தல பேராலயம் அதிபர் தந்தை. சி.இருதயராஜ் அடிகளார் அவர்களை நாகூர்தர்கா தலைமை அறங்காவலர் ஜனாப், முஹல்லி, முத்தவல்லி ஹாஜா நஜ்முதீன் சாஹிப்,தர்கா ஆலோசனைக்குழு தலைவர்,டிரஸ்டி ஜனாப், செய்யது முஹம்மது கலீபா சாஹிப் ஆகியோர் சால்வை அணிவித்து, சந்தனம் வழங்கி வரவேற்றனர்.

— MAHENDRAN M

காரைக்குடி வித்யாகிரி பள்ளி மாணவர் உலக சாதனை



காரைக்குடி வித்யாகிரி பள்ளி மாணவர் சபரீஷ் குமார் காரைக்குடியில் நடந்த முப்பெரும் விழாவில்

இந்திய அரசியலமைப்பின் சட்டப்பிரிவுகளை 32 நிமிடங்களில்

மிகக் குறுகிய நேரத்தில் எவ்விதத்

தடையுமின்றி ஒப்புவித்து தனது

அபார நினைவாற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.இவரது சாதனையை சோழன் உலக சாதனை அமைப்

— M. Arumugam

LOCAL

திருச்சுழி பகுதியில் ஆற்றுப்பாலத்தில் சரக்கு வாகனம் தலைகீழாகக் கவிழ்ந்தது



நவம்பர் 21 அன்று, விருதுநகர் மாவட்டம் திருச்சுழி பகுதியில் உள்ள ஆற்றுப்பாலத்தில் ஒரு சரக்கு வாகனம் எதிர்பாராத விதமாக நிலைதடுமாறி, பாலத்தின் அருகில் உள்ள பள்ளத்தில் தலைகீழாகக் கவிழ்ந்தது.

வாகனம் தலைகீழாகக் கவிழ்ந்த நிலையில் கண்டறியப்பட்டு, அருகிலுள்ள திருச்சுழி காவல் நிலையத்தின் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைவாக புறப்பட்டு, விபத்து தொடர்பான தகவல்களை சேகரித்து, முதற்கட்ட விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விரிவான விசாரணை நடத்தி, சாட்சியாளர்களின் விளக்கங்களைப் பெறுகின்றனர். தற்போது, விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் நிலைமையையும், போக்குவரத்து பாதிப்பையும் மதிப்பிடுகின்றனர்.

அதிகாரிகள் பொதுமக்களுக்கு எச்சரிக்கை வழங்கி, ஆற்றுப்பாலங்கள் மற்றும் பாலங்களின் பாதுகாப்பு விதிகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

— Siva

LOCAL

ஜகத் பிரகாஷ் நட்டா புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் ரூ.172.27 கோடி மதிப்பீட்டில் 7 திட்டங்களை அர்ப்பணித்தார்



மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஜகத் பிரகாஷ் நட்டா புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் ரூ.172.27 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ள 7 முக்கியத் திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

இந்தத் திட்டங்கள் ஜிப்மர் மருத்துவமனையின் மருத்துவச் சேவை, ஆராய்ச்சி மற்றும் மருத்துவக் கல்வியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன.

நிகழ்ச்சியில் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், முதலமைச்சர் ரங்கசாமி, உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், பொதுப்பணித்துறை அமைச்சர் மல்லாடி கிருஷ்ணா ராவ், மாநிலங்களவை உறுப்பினர் செல்வகணபதி, மக்களவை உறுப்பினர் வைத்திலிங்கம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் ஆறுமுகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

— Sudhakaran, Puducherry

சற்று முன் காரைக்குடி தேசிய நெடுஞ்சாலையில் விபத்து.



காரைக்குடி அருகே தேவகோட்டை ரஸ்தா தேசிய நெடுஞ்சாலையில் இன்று சற்று முன் இரு சக்கர வாகனத்தில் வந்தவர் மீது எதிர்பாராத விதமாக எதிரே வந்த கார் மோதியதில் இருசக்கர வாகனத்தில் வந்தவர் பலத்த அடிபட்டு சாலையில் விழுந்தார். சம்பவ இடத்திற்கு சோமநாதபுரம் போலீசார் விரைந்து சென்று விபத்து குறித்து விசாரித்து வருகின்றனர்

— M. Arumugam